# விலைமனு கோரல்

# விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

# இலங்கை நில அளவைத் திணைக்களம்

# நில அளவையாளர் நாயக அலுவலகத்திற்கான நலன்புரி சிற்றுண்டிச்சாலை சேவையைப் பெற்றுக்கொள்ளுதல்.

# விலை மனு இலக்கம் – SD/V/2026

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் 2026/2027 ஆம் ஆண்டிற்கு நில அளவையாளர் நாயக அலுவலகத்திற்கான நலன்புரி சிற்றுண்டிச்சாலை சேவைப் பெறுகைக்காக வழங்குநர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் நலன்புரி சிற்றுண்டிச்சாலை நடாத்துதல். (2026/ 2027 ஆம் ஆண்டிற்கு ஓராண்டு காலத்திற்கு) |
|---|---|
| **விலை மனு காப்பீடு (ரூ.)** | 50,000.00 |
| **விலை மனு காப்பீடு செல்லுபடியாகும் காலம்** | 2026.10.02 ஆம் திகதி முதல் 2026.12.18 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |
| **மீள செலுத்தப்படாத விலை மனுப் பத்திரக் கட்டணம் (ரூ.)** | 1,000.00 |
| **விலை மனு கோரும் ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய திகதி மற்றும் நேரம்.** | 2026.09.18 ஆம் திகதி தொடக்கம் 2026.10.01 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை |
| **முன் விலை மனு ஒன்றுகூடல்** | 2026.09.25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் |
| **விலை மனு வைப்புச் செய்தலை முடித்தல்** | 2026.10.02 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு |
| **விலை மனுக்களைத் திறத்தல்** | 2026.10.02 ஆம் திகதி மு.ப 9. 35<br>இற்கு பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு |
| **விலை மனுக்களைத் திறத்தல்** | 2026.10.02 ஆம் திகதி முதல் 2026.11.20 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |

2. விலை மனு கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.
3. ஆர்வம் காட்டுகின்ற தகுதி வாய்ந்த விலை மனுதாரர்களுக்கு பின்வரும் முகவரியில் அலுவலக நேரத்தில் விலைமனு கோரும் ஆவணங்களை பரிசீலிக்க முடியும் என்பதுடன், 011 - 2368106 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. விலை மனு கோரலுக்கான முழுமையான ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவிதமாக கட்டணங்களைச் செலுத்தி பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

5. தயாரிக்கப்பட்ட விலை மனுப்பத்திரங்களை (இரு பிரதிகளை உள்ளடக்கி இருக்க வேண்டும்) உள்ளடக்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயக அலுவலகத்திற்கான நலன்புரி சிற்றுண்டிச்சாலைக்கான விலை மனு கோரல் – 2026/2027" எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலை மனு வைப்புச் செய்தல் முடிவடைய முன்னர் கிடைக்கக் கூடிய விதமாக பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடிய விதத்தில் ஆவன செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ளவாறு விலைகள் திறக்கப்படும் என்பதுடன், விலை மனுக்களை முன்வைத்தவர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரமுள்ள பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள முடியும். அனைத்து விலை மனுக்களும் மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலை மனுக் காப்பீட்டுத் தொகையை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.
6. சமர்ப்பிக்கப்படுகின்ற விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் விலை மனு திறக்கப்படுகின்ற நாளில் இருந்து 49 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
7. கட்டளை கிடைக்கப் பெற்று ½ மாதத்திற்குள் (02 வாரங்கள்) உரிய சேவையை வழங்கத் தொடங்க வேண்டும் என்பதுடன், அத்திகதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு சேவையை வழங்குதல் வேண்டும்.
8. **முகவரி :** சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்), நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05. | தொலைபேசி / தொலைநகல் – 0112 368106

நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை நில அளவைத் திணைக்களம்.
2026.09.18